043

"தன்னலமற்ற சேவை"

# தூறல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
இன்ரறக்ற் கழகம்

# Jaffna Hindu College
Jaffna.

# THOORAL

INTERACT CLUB

"Service above self"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 189

எங்கள் தரமான விற்பனைகள்

சீமெந்து முதலான கட்டடபொருட்கள்

வர்ண சீத்தைகள்

லான் மாஸ்டர் என்ஜின்கள்

மோட்டார் சைக்கிள்கள்

MULTILACK PAINTS

இன்றே நாடுங்கள்

# வேல் வர்த்தக நிலையம்

# VALE TRADE CENTRE

114, STANLY ROAD
JAFFNA



மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களும், மற்றும்
ஒட்டோ உதிரிப்பாகங்களும்

சில்லறையாகவும், மொத்தமாகவும் நியாயமான விலையில்
பெற்றுக் கொள்ள

# மகாலக்ஸ்சுமி ஸ்ரோர்ஸ்

T.P:- 021-2025, 021-2024, 021-2134

212. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## WESTERN UNION MONEY TRAASFER

வெஸ்ரேன் யூனியன் பணம் மாற்றுதல், எவகின் எப்பாகத்திலிருந்தும்
யாழ் குடாநாட்டுக்கு பணம் அனுப்பினால் அன்றைய தினமே
பணம் உரியவர்களுக்கு வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/12043.

# தூறல்

# THOORAL

## இதழ்-03

10வது ஆண்டு நிறைவுச்சிறப்பிதழ்

இன்ரறக்ற் கழகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒரு பெரும் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந்தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே - பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவை பயில் கழகமும் இதுவே!
ஓங்கு நல் அறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒரு பெரும் கழகமும் இதுவே!
ஒளிர் மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினில் தாயென மிளிரும்
தனிப்பெரும் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERACT SONG

Let every good person give of their love
Vivela Interact
To carry our message of service above
Vivela Interact

## Chorus:

Vive la vive la Interact
Vive la Vive la Interact
Truth is our right
Love is our might
Vive la Interact
When something is wrong let us straighten it out
Vive la Interact
For nothing is worse than a fear or doubt
Vive la Interact - Chorus
The grooming of tomorrow's leaders we claim
Vive la Interact
Lets carry on service with fame to our name
Vive la Interact - Chorus
The person with a smile is the person we need
Vive la Interact
Who loses himself in the shaming of greed
Vive la Interact - Chorus


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் செய்தி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இன்ரறக்ற் கழகத்தினர் தமது பத்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1993ம் ஆண்டில் முதலாவது சஞ்சிகை வெளியிடப்பட்டு பின் 2001 ஆம் ஆண்டில் மூன்றாவது மலர் வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

1991.01.25 ஆந் திகதி கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கழகத்தின் செயற்பாடுகளை வெளிக்கொணரவும் அங்கத்தவர்களின் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தவும், ஊக்குவிக்கவும் கழக உறுப்பினர்கள் எண்ணியுள்ளனர். அவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.

எதிர்வரும் ஆண்டுகளில் கழக உறுப்பினர்களின் பணிகள் மேன்மேலும் சிறப்புற்றோங்க வாழ்த்துவதில் பேருவகை எய்துகிறேன்.

அ.சிறிக்குமரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் றோட்டறிக் கழகத் தலைவரின் செய்தி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ற் கழகத்தின் செய்தி மடலான "தூறல்" நீண்ட கால இடைவெளியின் பின் வெளிவருவதனையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.இம் முயற்சியில ஈடுபட்டிருக்கும் இன்ரறக்ற் கழகத்தினருக்கும் ஆசிரிய ஆலோசகருக்கும் எனது பாராட்டுக்கள்.

இன்ரறக்ற் கழகத்தின் இலக்குகளில் இரண்டு பின்வருமாறு அமைகின்றன.

1. ஆக்கபூர்வமான தலைமைத்துவம்,கண்ணியம் ஆகியவற்றை இனங்காணலும் வளர்த்தெடுத்தலும்
2. சமுதாய,தேசிய,சர்வதேவ விவகாரங்கள் பற்றிப்பரந்த அறிவையும் , புரிந்துணர்வையும் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்

உங்கள் கழகத்தின் செய்திமடலை உருவாக்குவதில், வெளியிடுதலில் பங்குபற்றும் உறுப்பினர் ஒவ்வொருவரும் பெறும் அனுபவங்கள், மடலில் வெளியாகும் செய்திகள்,கட்டுரைகள் போன்றவை யாவும் மேல் கூறப்பட்ட இலக்குகளை அடைவதற்கு உதவுமென்பது திண்ணம்.அந்த வகையில் நீங்கள் ஆற்றும் சேவை போற்றத்தக்கது. உங்கள் சேவை நன்கு பரந்து இவ்வாண்டு பல விருதுகளைப் பெற வாழ்த்துகின்றேன்.

Rtn.அ.பஞ்சலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாசிரியரின் இதயத்ததிலிருந்து

இந்து அன்னையின் இணையற்ற ஒரு குழந்தை இன்றறக்ற் கழகம். இக்கழகம் ஒரு தசாப்தகாலம் தனது சேவையை சிறப்புடன் வழங்கி பதினோராவது அகவையில் வீறுநடைபோடுகிறது. சிந்த னைகள் புதியன. செயற்பாடுகள் போற்றுதற்குரியன.

உயர்ந்த தலைமைத்துவம், சிறந்த நிர்வாகம், அன்புடன் கூடிய அதிபரின் அரவணைப்பு ஆகியவற்றின் மத்தியில் எமது கழகம் புதுமையான செயற்பாடுகளை செய்துவருகிறது.

கழகத்தின் இணைச் செயற்பாடாக "தூறல்" என்னும் மலரை வெளியிடுகின்றனர். இம் மலரில் வருவன யாவும் அரிய முத்துக்கள். இம் முத்துக்கள் அடங்கிய இதழ் அனைவராலும் பேணப்பட வேண்டிய சொத்து. "தூறல்" இதழ் நூல் வடிவம் பெற பங்களிப்பு செய்த இதயங்கள் பல. அத்தனை இதயங்களிற்கும் எனது இதய பூர்வமான நன்றியை வெளிப்படுத்துகின்றேன்.

இன்றறக்ற் கழகத்தின் சேவைகள் தொடர, தூறல் இதழ் தொடர்ந்து வெளிவர எனது ஆசிகள் பலப்பல

நன்றி

திரு.சி.தயாபரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் உள்ளத்திலிருந்து .............

தன்னலமற்ற சேவையை தாரக மந்திரமாக கொண்டு 10 ஆண்டுகள் கல்லூரி அன்னைக்கும் சமூகத்திற்கும் சேவையாற்றி 11 வது அகவையிலே காலடி எடுத்து வைத்துள்ள எமது கழகத்தின் சஞ்சிகையான "தூறல்" 6 ஆண்டுகளின் பின் 10 வது ஆண்டு நிறைவு மலராக இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது.

புதிய பாடத் திட்டத்தின் கீழ் மாணவர்கள் வேலைப்பழு அதிகரிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை திறம்பட ஆற்று வதோ அன்றி இவ்வாறான நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் ஈடுபடுவதோ மிகவும் கடினமான காரியமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கடந்த ஒரு வருட காலமாக கழகத்தை எம்மால் முடிந்த அளவு வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றுள்ளோம். இத்துடன் எமது கழகமலரையும் வெளியிட்டு எமது கல்லூரி அன்னைக்கும் சமூகத்திற்கும் எம்மால் முடிந்தளவு பணியை ஆற்றியுள்ளோம்.

இவ்வாறான எமது நடவடிக்கைகளிற்கு ஒத்துழைத்த நிர்வாக உறுப்பினர்களுக்கும் ஏனைய கழக அங்கத்தவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். அடுத்து வரும் காலங்களிலும் இன்ரறக்ற் கழகமானது தனது சேவையை திறம்பட ஆற்றுவதோடு, "தூறல்" இதழானது மாதந்தோறும் வெளிவர வேண்டுமென அடுத்த ஆண்டிற்கான நிர்வாக குழு உறுப்பினர்களை வேண்டி அவர்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

Int.தே.தபேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து............

இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் காலடி எடுத்து வைத்துள்ள எம் மனித சமுதாயம் தொடர்ந்தும் தன் பாதையில் வீறுநடை போட தேவைகளாக சேவைகளை எதிர் நோக்கி யிருப்பது கண்கூடு. அந்த வகையில் யாழ் மண்ணிற்கும் யாழ் இந்து அன்னைக்கும் கடந்த 10 ஆண்டுகாலமாக தன்னலமற்ற சேவையை வழங்கி வந்த யாழ் இந்துவின் இன்ரறகற் கழகம் தனது "தூறல்" என்ற 10 வது ஆண்டு நிறைவுமலரை வெளியிடுகின்றது.

போர் மேகங்கள் சூழ்ந்து அசாதாரணமான சூழ்நிலை நிலவுகின்ற எம் யாழ் குடாநாட்டின் சீரற்ற காலப்பகுதியிலும் தலைவரதும் கழக உறுப்பினர்களின் அயராத முயற்சியின் அறுவடையே "தூறல்" என்ற சஞ்சிகையாக விளைந்து நிற்கின்றது. விரைந்து செல்லும் இந் நவீன யுகத்தில் ஒரு கழகத்தின் செயற்பாடு களை பிறருக்கு தெரியப்படுத்துவதற்கு செய்தி ஏட்டினை வெளியி டுவது முக்கியமான பணியாகும். இந்த வகையில் தூறலின் மூன்றாவது இதழை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் இத் "தூறல்" மழையாக உங்கள் கைகளிடையே தவழ எமக்கு பெருந்துணை புரிந்த எம் கல்லூரி அதிபர் திரு.அ.சிறிக்குமரன் அவர்களுக்கும் றோட்டரிக்கழகத்தின் தலைவர் Rtn.அ.பஞ்சலிங்கம் அவர்களுக்கும் எமது ஆலோசகர் Rtn.ந.வித்தி யாதரன் அவர்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமகிழ்வடைகிறோம்.

எமது இத் "தூறல்" பெரும் அடைமழையாகும் போது எமது கழகம் சர்வதேச மட்டத்திலும் தனக்கென தனியிடத்தை பெற்றுக் கொள்ளும் என்ற தளரா நம்பிக்கை எமக்குண்டு

Int.அ.அன்றூ நிசாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Executive Commitee2000/2001

| | |
|---|---|
| 1) Patron: | Mr.A.Srikumaran (The Principal) |
| 2) Teacher-in-Charge: | Mr.S.Thayaparan |
| 3) Rotary adviser: | Rtn.N.Vithiyatharan |
| 4) President: | Int.T.Thabendra |
| 5) Secretary: | Int.T.Kopinath |
| 6) Treasurer: | Int.T.Ragulan |
| 7) VicePresident | Int.P.Suthan |
| 8) Asst.Secretary: | Int.T.Lavan |
| 9) Club Service: | Int.M.Janenthiran |
| 10) CommunityService: | Int.S.Karthigan |
| !!) Finance: | Int.T.Anujan |
| 12) International Understanding: | Int.V.Kokulan |
| 13) Sergeant-at-Arms: | Int.P.Mayooran |
| 14) Editors: | Int.A.A.Nishanthan<br>Int.S.Thillakan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Executive Comittee 2000/2001



Standing(L to R) : Int .S. Gunavarshan, Int.A.A.Nishanthan, Int.P.Lavan, Int.T.Anujan, Int.M.Janenthiran, Int.S.Thillakan, Int.S.Mayooran, Int.S.Karthigan,Int.V.Kokulan

Sitting (L.to R): Mr.A.Srikumaran(Principal), Int.T.Ragulan, Int.T.Thabendra, Int.T.Kopinath, Mr.S.Thayaparan(Teacher in Charge), Mr.P.Maheswaran (Deputy Principal)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூறலாய் தூறலில்.......

பக்கங்கள்

01) செயலர் அறிக்கை 01

02) சேவையில் இணைந்துள்ள றோட்டறிக் குடும்பம் 04

03) சேவையின் தேவை 07

04) They will Change 08

05) தலைமைத்துவம் பற்றி சில வார்த்தைகள் 09

06) தமிழின விடிவுக்காய் சேவை செய்வாய் 11

07) சூழல் மாசடைதல் 12

08) An Ambassadar 14

09) புரியாத மரணம் 15

10) இன்ரநெற் என்றால் என்ன? 19

11) இன்ரறக்ற் கழகமே நீ வாழி 20

12) சேவையின் மகிமை 21

13) கருணைக்கடல் அன்னை தெரேசா 22

14) Details of Quiz Competition 2001 23

15) Executive comittee 24

16) Members of Our Club 25

17) நன்றிகள் பல 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றறக்ற் கழகம்

# நிகழ்ச்சித் திட்ட அறிக்கைத் தொகுப்பு

தன்னலமற்ற சேவை என்ற தாரக மந்திரத்தை நெஞ்சில் நிறுத்திச் சேவையாற்றி வரும் எமது இன்றறக்ற் கழகம் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் பரந்த பணிகளையும் தொண் டுகளையும் ஆற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கல்லூரி அன்னைக்குப் பெருமை சேர்த்து வருகின்றது.

கடந்த ஓராண்டுக் காலப் பகுதியில் எமது கழகம் மேற்கொண்ட சேவைத் திட்டங்களின் விபரம் வருமாறு:

<u>கல்லூரி மட்டத்தில்</u>

எமது கழக அங்கத்தவர்கள் கல்லூரி வளாகத்தினுள் பொருத்தமான சிரமதான நடவடிக்கைகளை அடிக்கடி மேற்கொண்டு வருகின்றனர். கல்லூரி வைபவங்களுக்குத் தேவைப்படும் போதெல்லாம் சிறப்புப் பங்களிப்பாற்றுகின்றனர். மேலும் உயர்தர, சாதாரணதர பரீட்சைக் காலங்களில் கடமைகளில் ஈடுபடுகின்றனர். உயர்தர மாணவர்களுக்குத் தேவையான Rough Sheet உம் விற்பனை செய்யப்படுகின்றது.எமது கழக அங்கத்தவர் மத்தியில் நல்லொழு க்கத்தையும் சிறந்த உளப்பாங்கையும் வளர்ப்பதோடு அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக வருவதை உறுதி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது அத்தோடு அங்கத்த வர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்காக அவர்கள் ஆங்கில நாவல்களை வாசிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது அவர்க ளது ஆங்கிலத்தரத்திற்குப் பொருத்தமான நாவல்களும் தெரிந்து கொடுக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் பொருளாதார சிரமங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சில மாணவர்களுக்குச் சப்பாத்துக்கள் வழங்கப்பட்டன. கடந்த செப்ரெம்பரில் கல்லூரியின் மைதானச் சூழலில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. சில விசமிகள் இம் மரக்கன்றுகளைச் சுற்றி அமைக்கப்பட்ட கூடுகளை அகற்றியதால் உரிய பயன் பெறப்படாமை துரதிஷ்டவசமானது.

இவை தவிர றோட்டறிக் கழகத்தினர் எமது கல்லூரியில் நடாத்தும் தலைமைத்துவச் செயலமர்வுகள் சிறக்க எமது அங்கத்தவர்கள் தம்மாலியன்ற சரீர உதவிகளை வழங்கி வருகின்றனர் யாழ் நகரமைய றோட்டறிக் கழகத்தவர்கள் நடாத்தும் பொது அறிவுப்போட்டி வினாத்தாள்களையும் விற்பனை செய்து வருகின்றோம்.

நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்து கண்காணிப்பு மிக அண்மையில் மீள ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது பாடசாலை ஆரம்பிக்கமுன்னரும் பாடசாலை முடிவடைந்த பின்னரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கழகத்தினர் போக்குவரத்து கண்காணிப்பை மேற்கொள் கின்றனர்.யாழ் காவல்துறை பிரிவினர் நடாத்திய போக்குவரத்து கண்கா ணிப்பு கருத்தரங்கில் எமது அங்கத்தவர்கள் பங்குபற்றியமை மிகப்பய னுடையதாக இருந்தது.இந்த போக்குவரத்து கண்காணிப்பிற்கு நல்ல வரவேற்பு கிடைத்துவருகின்றது.

## நூலக வளர்ச்சியில்

எமது கழகம் கல்லூரி மட்டத்தில் மேற்கொண்டுவரும் மிகப்பாரிய செயற்திட்டம் கல்லூரியின் சிரேஷ்ட நூலகவளர்ச்சியில் கைகொடுத்தல் ஆகும்.தேவைப்படும் போதெல்லாம் எமது கழக உறுப்பினர்கள் நூலகத்தை ஒழுங்கமைப்பு செய்து உதவுகி ன்றனர்.நூலகத்திற்கு கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற நாற்பதிற்கும் மேற்பட்ட ஆங்கில நாவல்களை நாம் bind செய்து வழங்கியுள்ளோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக க.பொ.த.(உ/த 2001) கணிதப்பிரிவு மாணவனான அமரர் சோமசுந்தரம் சஞ்ஜீவன் ஞாபகார்த்தமாக சுமார் 150 ஆங்கில நாவல்கள் உட்பட ஏறத்தாழ 200 நூல்களை கல்லூரியின் நூலகத்திற்கு இன்று அன்பளிப்பு செய்கின் றோம்.இந்த நூல்கள் கழக நிதியிலிருந்தும் உறுப்பினர்களினூடாகவும் சேகரிக்கப்பட்ட சுமார் ஒன்பதினாயிரம் ரூபாய் பெறுமதியுடையவை ஆகும்.இந்தநூல்களை bind செய்வதில் நாம் இடர்ப்பாடுகளை எதிர் நோக்கிய போது நிதியுதவிக்கு கை கொடுத்தவர்கள் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் என்பது குறிப்பிடப்பட வேண்டியவிடயமாகும்.

## சமூகமட்டத்தில்

எமது பாடசாலைச்சுற்றாடலில் வாழும் மக்கள் சுத்தமான குடிநீரை பெறுவதை உறுதிசெய்து கொள்வதற்காக J/104,J/105 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள வீட்டுக் கிணறுகளிற்கு குளோரின் இட்டோம்.

திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் முத்துத்தம்பி சிறுவர் இல்லத்திற்கு உதவும் நோக்குடன் அவர்களின் விருந்தினர் தங்குமிடம் செப்பஞ்செய்து கொடுக்கப்பட்டது.

கொக்குவில் பொற்பதி பகுதியில் தூர்ந்து காணப்பட்ட வாய்க்கால் ஒன்று எம் கழக அங்கத்தவர்களால் துப்புரவு செய்து கொடுக்கப்பட்டது.மேலும் க.பொ.த.உயர்தரத்திற்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் பொது அறிவு பாடத்தில் மாணவரை ஊக்குவிப்பதற்காக இன்ரறக்ட் பாடசாலைகட்கு இடையில் ஒரு வினாடிவினா நிகழ்வை நிகழ்த்தினோம் இம்முறை ஆறு பாடசாலைகளே பங்குபற்றின. இனிவரும் காலங்களில் அனைத்து பாடசாலைகளும் பங்குபற்றும் என எதிர்பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலையில் .....

எமது கல்லூரிக்கு அடுத்தபடியாக அதிக செயற்திட்டத்தை நாம் மேற்கொள்ளும் இடம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகும். அவ் வகையில் கடந்த மார்ச்சில் வைத்தியசாலையின் விடுதி ஒன்று துப்பரவாக்கப்பட்டு குளோரின் இட்டுக் கழுவிக் கொடுக்கப்பட்டது அதன் பின் வந்த தவணை விடுமுறை காலத்தில் ஒரு விடுதியில் பல இரும்புக்கட்டில்களில் பழைய தீந்தை சுரண்டி அழிக்கப்பட்டு புதியதீந்தை அடித்துக் கொடுக்கப்பட்டது. இது தவிர எமது கழகத்தின் உயர்தர மாணவர்களிற் பலர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு தொடர்ச்சியாக இலவச இரத்ததானம் செய்துவருவது குறிப்பிடவேண்டிய அம்சமாகும். எமது கழகத்தை சேர்ந்த Int.சி.சிவகுமரன் இரத்தவங்கியைச் சேர்ந்த Dr.சிவசங்கர் அவர்களின் உதவியுடன் மகாஜனாக் கல்லூரியில் ஓர் இரத்த தான முகாமையும் உயர்தர மாணவருக்கு கருத்தரங்கையும் நடாத்தி வைத்தார்.

## இடம்பெயர்ந்தோருக்கு உதவுதல்

கடந்த ஆண்டில் சமூக மட்டத்தில் நாம் மேற்கொண்ட மிகப்பெரிய செயற்றிட்டம் தென்மராட்சியில் ஏற்பட்டகடும் சண்டையினால் இடம் பெயர்ந்து அடிப்படைத்தேவைகள் கிடைக்காமல் அல்லற்பட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு உதவியமை ஆகும்.

தனியார் கல்விநிறுவனங்களிலுமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் உண்டியல் மூலம் நாம் சேகரித்த சுமார் 25000 ரூபாவிற்கு வாங்கிய உணவு முதலிய அத்தியாவசிய பொருட்களையும் பொது மக்களிடம் நாம் சேகரித்த சுமார் 25 மூடை உடுபுடைவைகளையும் யாழ் நகரமைய றோட்டறக்ட் கழகத்தினுடாக நாம் இடம் பெயர்ந்த மக்களிடம் சேர்ப்பித்தோம்.

செயலர்,
Int.தி.கோபிநாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையில் இணைந்துள்ள றோட்டறி குடும்பம்

சேவை சர்வதேச புரிந்துணர்வு என்பவற்றிற்கான அர்ப்பணிக்கப்பட்ட உலகநட்புறவில் இணைந்து செயற்படுவதற்காக இளைஞர், யுவதிகளுக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதனை பிரதான நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டவையே றோட்டறி குடும்பத்தைச் சேர்ந்த இன்ரறகற்கழகம்(Interact club), றோட்டறக்ட்கழகம் (Rotaract club), றோட்டறிக்கழகம்(Rotary club) என்பனவாகும். உலகில் சேவையை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்புக்களுள் முதன்முதலில் தோன்றியது றோட்டறி அமைப்பாகும். 96 ஆண்டுகளை இன்று நிறைவு செய்யும் இவ்அமைப்பின் வழிவந்தவையே இன்ரறக்ற், றோட்டறக்ட் கழகங்களாகும்.ஆனால் இவை றோட்டறிக் கழகத்தின் ஓர் அங்கமன்று.றோட்டறிக் கழகம் இவ்விரு கழகத்திற்கும் அனுசரனையாக இருத்தல் அவசியம். சேவை, சர்வதேச புரிந்துணர்வு ஆகியன தொடர்பாக அர்ப்பணிப்புடைய இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதோடு, அவர்களது தனிப்பட்ட ஆளுமை, அறிவு, திறன் என்பவற்றை உயர்த்துவதற்கான நோக்கத்திற்காகவும் றோட்டறியின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டதே இன்ரறகற், றோட்டறக்ட் கழகங்களாகும். 14 முதல் 18 வயதிற்கிடைப்பட்ட இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் இவ் இன்ரறக்ற் கழகத்தில் அங்கத்தவராகலாம். International action என்ற சொற்களிலுள்ள தடித்த எழுத்துக்களின் கூட்டே interact ஆகும். இதே போன்று 18 முதல் 29 வயது வரையிலான இருபாலாருக்குமென உருவாக்கப்பட்டதே றோட்டறக்ட் கழகமாகும். சேவை, நட்புறவு என்பவற்றினூடாக சமூகத்தின் பௌதிக, சமூகத் தேவைகளை நிறைவேற்றுவனவாக இவை அமைக்கப்பட்டன.

"தன்னலமற்ற சேவை" (service above self) என்ற தாரக மந்திரத்தை குறிக்கோளாகக் கொண்டு இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இக்கழகங்களின் அன்னையாக விளங்குகின்ற றோட்டறிக்கழகம் உருவான வரலாறு மிகவும் சுவையானது. 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நெருக்கடியும் கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறையும் நிலவிவந்த அமெரிக்காவிலே றோட்டறிக்கழகம் உதித்தது.

1905ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி ஓர் இனிய மாலைப்பொழுதில் அமெரிக்காவின் சிக்காக்கோ மாநிலத்தில் தொழில் புரிந்த போல் ஹரிஸ் (Poul Harris) அவர்களும் அவரது நண்பர்களான நிலக்கரி வியாபாரி சில்வெஸ்ரர் சியில் (Silvester Schiele), சுரங்கப் பொறியியலாளர் கஸ்ரவஸ் லோர் (Gustavus Loehr) உடை தைக்கும் வணிகர் ஹிறாம் ஷோரே (Hiram Schorey) ஆகியோரும் 127, வடக்கு டியர்போன் வீதியிலுள்ள யுனிற்றிக் கட்டிடத்தின் 711ம் இலக்க அறையில் அமைந்திருந்த கஸ்வோரின் அலுவலகத்தில் சந்தித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தினத்திலேயே றோட்டறி அமைப்பானது உருவெடுத்தது. வாராந்தக் கூட்டம் ஒவ்வொரு அங்கத்தவரது வேலைத்தளத்திலும் ஓர் ஒழுங்குமுறையில் நடாத்தப்பட்டது. ஒருவரது தொழிற்துறையை மற்றவருக்கு அறிமுகப்படுத்துவது, தரமுயர்த்துவது என்ற நோக்கில் சுழற்சி முறையில் வடிவமைக்கப்பட்ட இக்கூட்டத்தொடரே பின்னர் சுழற்சி முறையின் ஆங்கிலப்பதமான Rotary என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அச்சக உரிமையாளரான ஹரி றகிள்ஸ் (Harry Ruggles) 5வது அங்கத்தவராக சேர்க்கப்பட்டதும் இக்குழவினரால் சம்பிரதாய பூர்வமாக அமைக்கப்பட்டதே "சிக்காக்கோ றோட்டறிக் கழகமாகும்".

1911ம் ஆண்டு பிராங் கொலின்ஸ் (B.Frank Collins) என்பவர் மற்றவர்களுக்கு தொண்டு செய்வதன் முக்கியத்துவத்தையும், "சேவை தனக்காக அல்ல" (Service Not Self) என்ற கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு யார் சிறப்பாக தொண்டாற்றுகிறார்களோ அவரே அதிக பயனடைவார் (He profits Most who Serves Best), "தன்னலமற்ற சேவை"(Service above self) என்ற கருத்துக்களை தம் கழகத்தின் நோக்கங்களாக முன்வைத்தார். "வீணாகப் பொழுதைக் கழிப்பவனல்ல ஓர் உழைப்பாளி" என்ற பொருள்படுமாறு உருவாக்கப்பட்ட இலச்சினையான பற்சக்கரம் 1929 ல் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.றோட்டறியின் உத்தியோகபூர்வ நிறமாக றோயல் நீலநிறமும் தங்கநிறமும் தெரிவு செய்யப்பட்டு றோட்டறியின் கொடி உருவானது. தோடர்ந்து றோட்டறியின் நோக்கங்களும் கொள்கைகளும் அமைக்கப்பட்டது.

இவ்வாறு மிகவேகமாக உருவெடுத்து வந்த றோட்டறிக் கழகம் இன்று 162 நாடுகளில் 29626 றோட்டறிக் கழகங்களில் 11 லட்சத்திற்கு மேற்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட அங்கத்தவர்களையும் கொண்டு நிலைத்து நிற்கின்றது.

றோட்டறிக் கழகத்தைத் தொடர்ந்து அதன் சேயான இன்றரக்ற் கழகம் 1962 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் திகதி அமெரிக்காவின் புளொரிடா(Florida)மாநிலத்தில் முதன் முதலில் உருவாக்கப்பட்டது

பாடசாலை மட்டத்தை மட்டுமன்றி சமூக மட்டத்திலும் இக் கழகங்களின் திட்டங்களும் செயற்பாடுகளும் அவர்களாலேயே உருவாக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட கழக உத்தியோகத்தர்களின் வழிகாட்டலில் நிறைவேற்றப்படும்.ஒவ்வொரு கழகமும் ஒரு றோட்டறிக கழகத்தின் அனுசரனையுடனேயே இயங்கும்.உரிய வழிகாட்டல்களை றோட்டேரியன்களிடம் பெறுவதன் மூலம் சமூகத்தில் உதவி தேவை ப்படும் அங்கவீனமுற்ற சிறுவர்கள், வயதானவர்கள் போன்ற பல தரப்பினர்க்கும் இன்றறக்ற் கழகங்கள் சேவையாற்றி வருகின்றன.

இன்றறக்ற்கழகம் இலங்கையில் முதன்முதலாக 1964ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் திகதி பரியோவான் கல்லூரியில் (St.John's College) முதன் முதலாக நிறுவப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 21 இன்ரறகற் கழகங்கள் யாழ்மண்ணில் உருவெடுத்துள்ளன. மனித நேயச் சேவைகளை ஆற்றிவரும் இவ் இன்ரறக்ற் கழகங்கள் இன்றைய போர்மேகங்கள் சூழ்ந்த யாழ்மண்ணிற்கும் மக்களுக்கும் பேருதவியாகவும் இன்றியமையாததாகவும் விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

எங்கெல்லாம் குழப்பங்கள் ஏற்படுகின்றனவோ அங்கெல்லாம் அமைதியை நிலைநாட்டவும் அழகற்ற இடங்களை அழகுறச்செய்யவும் ஏகாந்தமும் தப்பெண்ணமும் நிலவும் இடங்களில் தோழமையை உருவாக்கவும் வறுமையும் நோயும் உள்ள இடங்களில் மகிழ்ச்சியையும் சுகத்தையும் பேணவும் புலம்பெயர்வால் அல்லலுற்று வாழும் மக்களின் நிலைபெயர்ந்த உள்ளங்களுக்கு ஆறுதலும் தேறுதலும் அளிக்கவும் இன்ரறக்ற் கழக அங்கத்தவர்கள் கடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். விசேடமாக குறிப்பிடின் ஓர் இன்ரறக்ற் கழகம் அச்சமூகத்தில் வாழ்கின்றவர்களின் தனிப்பட்ட தொழில்சார் சமூகத்தேவைகளை நிறைவேற்றுகின்ற ஓர் சிறந்த அமைப்பாக விளங்குகின்றது. அதுமட்டுமல்லாமல் "தன்னலமற்ற சேவை" (Service Above Self) எனும் குறிக்கோள் சேவையின் இலட்சியத்தை தெளிவாக விளக்குவதோடு சிந்தனையிலும் செயலிலும் சேவையில் விருப்பமுள்ள மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரையும் ஒன்றிணைக்கின்றது.

சர்வதேச றோட்டறியின் (Rotary International) ஓர் அங்க மாகவே யாழ் றோட்டறிக்கழகம் விளங்குகின்றது. அதன் தற்போதய தலைவர் Rtn.அ. பஞ்சலிங்கம் அவர்கள் சகல இன்ரறக்ட்கழகங்களினதும் எல்லா நடவடிக்கைகள், நிகழ்சித் திட்டங்கள், கொள்கைகள் என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கட்டுப்படுத்தியும் வருகின்றார்.

அதுமட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் இன்று 6812 றோட்டறக்ற் கழகங்களில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட றோட்டறகற் அங்கத்தவர்கள் சேவையில் இணைந்துள்ளனர். மேலும் 7172 இன்ரறக்ற் கழகங்களில் சுமார் 164000 ற்கு மேற்பட்ட இன்ரறக்ற் உறுப்பினர்கள் பாடசாலை மட்டத்திலும் சமூகமட்டத்திலும் சேவையில் ஈடுபடுகின்றனர்.

எதிர் வரும் காலங்களிலும் இத் தாய்தமிழ் மண்ணில் சேவை செய்வதே நோக்கம் அதை திறம்படச்செய்வதே இன்பம் என்பதை உணர்ந்து கழக உறுப்பினர்கள் செயற்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

By:A.Andrew Nishanthan
2003 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையின் தேவை

இழப்புக்கள் கதையாக, இன்னல்கள் தொடர
இடர்ப்பட்ட இதயங்களுக்குத் தேவை -என்றும்
இயல்பான இளைஞரின் சேவை

கலைந்து நிற்கும் எம்மினத்தின் கனவுகள் நனவாக
காலத்தால் அழியாத சேவை
கணக்கின்றி எம்மவர்க்கு தேவை

விண்ணதிர நாம் நடந்து வீறுடன் கை விலங்கொடிக்க
விலைபேச முடியாத சேவை-மன
விருப்புடனே என்றென்றும் தேவை

சுயநலத்தின் விளைவாய் சுலபமாய் அரங்கேறும்
தனிமனிதன் விளையாட்டல்ல தேவை -அதற்குத்
தனைக்கொடுக்கும் மனவுறுதி தேவை

தியாகத்தை நேசிக்கும் திறனுள்ள இளைஞர் எம்
தளரா தன்னலமற்ற சேவை -நிலை
தடுமாறும் நம் நாட்டுக்குத் தேவை

BY:-V.Kokulan (2003 A/L)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் சுவையுடன் தரமும் விரும்புவோர்
நாடும் ஒரே ஒரு கிறீம் ஹவுஸ்

# ராஜா கிறீம் ஹவுஸ்

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்

முதலிய சுவைமிகு ஐஸ்கிறீம்களுடன் சிற்றுண்டிகள்
உண்டு மகிழ நாட வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்.

36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

- ஆடவர்க்கு ஏற்ற சேட்டிங் சூட்டிங்
- நங்கையர் விரும்பும் நவநாகரீக டிசைன்கள்
- ஸ்கேட் அன் பிளவுஸ்
- பஞ்சாபி மற்றும்
- சாறி வகைகள்

அனைத்தும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# ELAVARASI TEXTILE

57, NEW MARKET
JAFFNA

# இளவரசி ரெக்ஸ்ரைல்

நவீன உடைகளின் சங்கமம் அதுதான்

57,நவீன சந்தை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JEISHEBA AGENCY

**GENERAL HARDWARE MERCHANTS**

JSD

*Agent For :-*
*Tokyo cement company(Lanka)Ltd.*
*Kesewatta Marketing Services(Pvt)Ltd.*
*S-Lon Lanka(Lanka)Ltd.*
*CJS Paints Ltd.*

**Tel:021-2407**
**Fax:021-2140**

**132 STANLY ROAD**
**JAFFNA**



கல்விச்சேவையின் கலங்கரை விளக்கம்

தரமாக கற்பித்தல்

திறமை மிகு ஆசான்கள்

# RAJA INSTITUTE

இக் கால மாணவ மாணவிகளின் கல்வி வழிகாட்டி

தரம் 3 முதல் O/L வகுப்புக்கள் வரை
'SUPER GRADE"
ஆசிரிய குழுவினால் கற்பிக்கப்படுகிறது

NANTHAVIL LANE,
KOKUVIL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THEY WILL CHANGE

Sea.....
The big peaceful capacity of water...
In normal times....
The waves will jump with delight....
The school will play in its
Wave hands.
The surface will smile
Like a joyful man.
But...
When the nature going mad
The sea will go mad.
It will growl and jump.
The waves will swirl...
The schools will hide
Under the Sea.....
Sea will howl....
Like an angry man

K.Tharshanan
Grade 10E.

Glossary :
School - a gang of fishes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைத்துவம் பற்றி சில வார்த்தைகள்

பல்வேறுபட்ட செயற்பாடுகள், கழகங்கள், நிர்வாக அமைப்புக்கள் ஏன் நிறுவனங்களிலும் தனக்கு கீழ்ப்பட்டோரை ஒருவன் சிறந்த வழியில் இலகுவாக தனது நோக்கை அடையும் வழியில் நெறிப்படுத்துவானாயின், அவன் தலைவன் எனப்படுவான்

அவ்வாறு நெறிப்படுத்துகின்ற போது மிகவும் முக்கியமான திறன் தலைமைத்துவம். இத்திறனானது தலைவனினால் சிறந்த முறையில் தனது உதவியாளர்களை நெறிப்படுத்துவதில் தங்கி வளர்ச்சியுறும். தலைவன் எனும் போது அவன் தனது உதவியாளரைவிட வலுவுடையதாக காணப்படின், அது அவனிற்கு மற்றவர்மீது நெறிப்படுத்தலை பணிக்கும் பாங்கை இலகுவாக பெறவுதவும். இவ்வாறு இலகுவான நெறிப்படுத்தும் ஆற்றலைபெறுவதனால் தனது எண்ணப்படி கருமங்களை நிர்வகித்து தனதுஇலட்சியத்தை அடைவதில் எந்தவித இடையூறும் குறுக்கிடாது

இது பல்வேறுபட்ட இயல்புகளின் அடிப்படையில்/ வகைகளில் அடங்க வாய்ப்புண்டு

1.பிறப்பிலான தலைமைத்துவம்
2.பாரம்பரிய தலைமைத்துவம்
3.தெரிவு தலைமைத்துவம்
4.நியமனத்தலைமைத்துவம்

தலைமைத்துவம் எனும் போது அதன் முக்கிய அம்சங்களாக/ தலைமை தாங்கும் திறனுள்ளவரின் அம்சங்களாக ,

1.தனது உதவியாளரை /கீழ்ப்பட்டோரை அவர்களின் நடத்தைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல்.
2.தனது நோக்கத்தை அடைவதற்கு வேண்டிய செயற்பாட்டு திறனை கொண்டிருத்தல்.
3.நோக்க உணர்வுடன் செயற்படுதல்.
4.சிறந்த தொடர்பாடல் திறனை கொண்டிருத்தல்.
அதாவது தனக்கு வேண்டியோரிற்கு தேவையான செய்தியை உடனடியாக தெரிவிப்பதில் விரைவினை கொண்டிருத்தல்
5.சிறந்த பேச்சாற்றலை கொண்டிருத்தல்
இதன் மூலம் தனக்கு கீழ்ப்பட்டோரை தன்னைநோக்கி கவருவதன் மூலம் நோக்கை அடைவதில் வெற்றி பெறலாம்
6.தனது தலைமைத்துவம் / பொறுப்பு என்பவற்றில் ஏற்படுகின்ற விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை கொண்டிருத்தல் வேண்டும். இதன் மூலம் செயல்களில் குறைபாடுகளை புரிந்து கொண்டு அவற்றினை திருத்துவதன் மூலம் மேலும் வளர்ச்சியுறலாம்.
7.தேவைப்படும் நேரத்தில் சிறந்த தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் முரண்பாடுகளை சமயோசிதமாக தீர்த்து வைக்கும் திறனையும் கொண்டிருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் கொண்டிருக்கும் இயல்புகள்,அதிகாரங்கள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு தலைமைத்துவமானது

1) ஜனநாயக முறையிலான தலைமைத்துவம்

2) அதிகாரமயப்படுத்தப்பட்டதலைமைத்துவம் என

பிரிக்கப்பட்டு விளங்கப்படலாம்.

ஜனநாயக முறையிலான தலைமைத்துவம் என்பது தலைவனிடம் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் /மிகவும் குறைந்தளவு அதிகாரங்கள் காணப்படுதலாகும். இதன்போது அவனிடம் சுயமான தீரமானம் எடுக்கும் ஆற்றல் குறைவாக காணப்படும். இவ்வகையான தலைமைத்துவம் எந்தவொரு நிர்வாக கட்டமைப்பிற்கும் ஏற்றதொன்றல்ல.

அதிகாரமுறையிலான தலைமைத்துவம் என்பது தலைவனது சுயதீர்மானமும் அவனது முழுமையான அதிகாரங்களும் கடைப்பிடிக்கப்படும் இதன் வாயிலாக ஜனநாயக முறையிலான தலைமைத்துவம் வளர்ச்சியடையும். தலைவன் மிகக் கூடியளவு அதிகாரங்களை பிரயோகிக்கும் போது அவனுக்கு கீழ்ப்பட்டோரால் இது பின்பற்றப்படும்

இதனையே வர்த்தகதுறை சார்ந்தோர் எதிர்கணிய நேரக்கணிய முறையிலானவை என விளக்க முறப்படுவர். தலைமைத்துவம் என்பதை ஒரு துறையாக்கி அதில் ஆய்வுகள் கருத்துக்கணிப்புகள் போன்றன நடாத்தப்பட்டுள்ளன. இவை தலைமைத்துவம் பற்றிய அறிவினை ஏனையோர்க்கு வழங்குவதில் முன்நிற்கின்றன தலைமைத்துவம் பற்றிய கோட்பாடுகள், கொள்கைகள் என்பவற்றை முன்வைத்தோரில்

1)DOUGLAS MC GREGOR

2)HUNERYAGER & HECKMAN

என்போர் முக்கியமானவர்கள்.

இவ் வகையான தலைமைத்துவத்தினை நமக்குள்ளே வளர்த்துக்கொள்வதற்கு பாடசாலைகளில் இயங்கும் கழகங்கள் ஏற்றன இவற்றிலே மாணவர் இணைந்து கொள்வதுடன் நில்லாது அதன் பின் அவற்றை ஒழுங்காக வழிநடத்தி மேலும் ஒருபடி உயர்த்தவும் அதன் மூலம் நம்மை, நமது திறமைகளை, தலைமைத்துவத்தினை மேலும் வளர்த்துக்கொள்ளலாம்.

சி. கார்த்திகன்
13 E BIO 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழின விடிவுக்காய் சேவை செய்வாய்

பார்க்கும் இடமெங்கும் அல்லலுற்றலையுமிம் மாந்தருளே
மார்க்கம் அறியாது மருண்டிடும் மக்களின் மருங்கினிலே
ஆர்க்கும் உதவிடும் மாண் மிகு கரங்களும் சில இருந்தால்
போர்க்கும் அஞ்சலை அகற்றிடலாம் இம் மானிடத்தில்

சேர்க்கும் புகழுடன் சேவையே புரிந்திடும் உளங்கள் பல
ஏர்க்கும் கரங்கொடுத்திலங்கிடும் உழவர் செய் உழவுத்தொழில்
சீர்கள் பல் செய்து நற்கல்வி புகட்டிடும் நல்லாசான்கள்
பார் அது புகழ்ந்திட வாழ்கவே அவர் தம் சேவை

தீர்க்கும் ஔடதம் அவனிக்கு வழங்கியே அரவணைத்து
பேர் புகழ் கருதாப் பெருஞ்சேவை அவனியில் வைத்தியமே
சார்பின்றி நடுநிலைத் தீர்ப்புகள் வழங்கியே மானிடத்தை
வேர் ஊன்ற வைத்திட்ட சேவையது நீதிச் சேவை

சோர்வின்றி நம்மவர் உழைத்திடவேயிங்கு எழுந்திட்ட சேவைதான்
-வர்த்தகமாம்
கார்மேகம் விரைந்திங்கு கண்ணீர் வடித்தாலும் கண்ணியம் தவறா
-போக்குவரத்து சேவையுண்டு
நீர் இன்றி வாடிடும் நகர்கட்கெல்லாம் நீர் வழங்கும் நீர்ப்பாசன
-சேவையது
ஊர் ஊராய்த்திரிந்திங்கு உதவி பல புரிந்துவரும் நிறுவனசேவை
-வாழ்க!
யார்யார்க்கு துயர் வரினும் சேவைக்காய் விரைந்தெழுவோம்
ஓர் நாள் நம் தமிழினம் சுடர் விட்டுச் சுவாலிக்கும் !
தேர் ஏறிப்பவனிவரும் கந்தன் அருளிருக்க செய்திடுவாய்
-தமிழ்ச்சேவை!

தமிழா நீ செய்திடுவாய் தமிழ்ச்சேவை!

BY:-S.Brinthapan
Grade :-11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்கா நகை மாளிகை

நவீன அழகிய ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

22 கரட் நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

உங்கள் இரசனைக்கமைய எங்கள் கைவண்ணங்கள்

தங்க நகை உலகின் தாரகை நட்சத்திரம்

188, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்



உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க வைர நகைகளைப்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

# Saranga Nakai Madam

# சாரங்கா நகை மாடம்

Gold & Jewel Merchants

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Telephone: 2480

**Head office:**

**Arul Murugan Nahai Akam**
**96/1, Kasthuriar Road, Jaffna.**

அருள் முருகன் நகையகம்
96/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Branch:
Siva Nahai Madham
Jaffna Road, Chavakachcheri.

சிவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான பைப் வகைகளும்

மின்சாரப்பொருட்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

விற்கப்படும்.

SUNDHARSON

MARKET VEEW,
MANIPAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்
## Environmental Pollution

**<u>சூழல் மாசடைதலுக்கான காரணங்கள்</u>**

சூழல் மாசடைந்து போவதற்கு எவை காரணமாகின்றன என்பது பற்றி உலக நாடுகள் ஆராய்வு செய்து வருகின்றன. எனினும் சூழல் மாசடைவதற்கு ஓரிரு காரணிகள் அடிப்படையில் இல்லை என்பதனாலேயே, அதனைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதும் சிரமமாக உள்ளது. அண்மைய ஆராய்ச்சிகள் சூழல் மாசடைவதற்கு பின்வரும் காரணங்களை எடுத்துக்காட்டுகின்றன.

1. தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டமையால் புகை,தூசி போன்றனவும் கழிவுப்பொருட்களும் சூழலில் அதிகரித்துள்ளமை
2. போக்குவரத்து அதிகரிக்கப்பட்டமையால் வாகனங்களின் கழிவுப்பொருட்கள் அதிகரித்து வருகின்றமை.
3. கமத்தொழில் அபிவிருத்தியினால் வளமாக்கிகளினதும் இர–சாயன பொருட்களினதும் பயன்பாடு அதிகரித்தமை.
4. எரிபொருட்களினது திறனற்றசெயற்பாடு காரணமாக எரிபொருட்கள் சிந்துதல்.
5. கதிர்வீச்சு பொருட்களின் பயன்பாடு அதிகரித்துச் செல்லுதல்
6. அரசும் தனியாரும் காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்
7. பிளாத்திக் பொருட்களும்பொலூத்தீன் கடதாசிகளும் அதிகமாக பாவிக்கப்படுதல்
8. நாடுகளுக்கிடையோ அல்லது உள்நாட்டிலே போர் ஏற்படும் போது ஆயுதங்களினதும் மருந்துப்பொருட்களினதும் பயன்பாடு அதிகரித்தல்

**<u>சூழல் மாசடைவதால் ஏற்படும் பேராபத்துக்கள்</u>**

சூழல் மாசடைந்து வருதல் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு மட்டுமன்றி அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கும் ஓர் சவாலாக அமைகின்றது இது சர்வதேச ரீதியில் கவலையை ஏற்படுத்தும் விடயமாகும் இயற்கை சமனிலை குலைவதற்கும் சூழல் மாசடைதலே காரணமாகும் இது மனித குலத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடியதாகும் அமில மழை பொழிதல்,ஓசோன் படையில் துவாரம் ஏற்படுதல் என்பன சூழல் மாசடைவதன் பாதிப்பேயாகும் இதை விட எல்நைனோ என்ற வறட்சிகாற்றும் புவி நடுக்கமும் எரிமலை குமுறலும் ஏற்படுகிறது. இவையும் பேராபத்துக்களை ஏற்படுத்துகின்றன சூழல் மாசடைவதால் மனிதகுலத்திற்கு ஏற்படும் அழிவுகள் பின்வருமாறு

1.இயற்கையின் பாதிப்பால் மனித குலத்திற்கு பல்வேறு வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் ஏற்படுதல்
2.தாவரங்கள் அழிந்துபோதல்
3.விவசாய உற்பத்திகள் பாதிப்படைதல்
4.வனவிலங்குகள் அழிவடைந்து போதல்
5.நீர் வாழ் உயிரினங்கள் அழிவடைந்து போதல்
6.கட்டடங்கள்,பாலங்கள் என்பவற்றில் பாதிப்பு ஏற்படல்

**சூழல் மாசடைவதனைத் தடுக்கும் நடவடிக்கைகள்**

சூழல் மாசடைவதனைத் தடுப்பதனால் மக்களின் காப்பாற்றிக்கொள்ள முடியும் இதன் மூலம் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளது சூழல் மாசடைதலை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் பின்வருமாறு

1.அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதைவிட நீர் மின்சாரம் உற்பத்தி செய்தல்
2.சூழல் மாசடைவதை கட்டுப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்ற வேண்டும். இதை மீறுவோருக்கு தண்டனை கொடுத்தல் வேண்டும்.
3. பிளாஸ்திக் பொருட்கள், பொலித்தீன் கடதாசிகள் முதலான வற்றை ஒரே இடத்தில் சேமித்து அழித்தல் வேண்டும்.
4. வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை தூசி முதலான வற்றை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
5.சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடத்தே ஏற்படுத்துதல்.
6. புகைப்போக்கிகள் உருவாக்குதல், கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தக்கூடிய குழாய்களை அமைத்தல்.

வ.நிதர்சன்
தரம் 10D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AN AMBASSADAR

At one of the fair
Selling quickly.
There are many..many
different kinds.
in it.
Oh……
This is a new year season
Many types
of men in the point.
every religion, every rice
every culture.
But surprise,
One lady goes
towards fair
She goes
to the textile section.
Err
She buys…buys
two kind of clothes.
One..
Sinhalee's' Kambaya.'
Another one..
Tamil's 'Seelai'
Majesty and delight
Sparkling in her eyes.
Oh..really…
is she a calalist?
What is she
but an ambassador
from peaceful world.

**By:-M.Anparasan**
**Grade:-10 E**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரியாத மரணம்.

இரவு 11.00 மணி இருளின் நிசப்தத்துடன் நிசப்தமாய் அந்த பங்களாவின் முன் வந்து நின்ற உயர் ரக "பென்ஸ்" காரிலிருந்து இறங்கிய வதனா, அந்த வீட்டில் 24மணிநேரமும் எரியும் மின் விளக்குகள் அன்று ஒளிராததால் ஏதோ விபரீதத்தை உணர்ந்து வீட்டின் பின்புறம் சென்று சுவரேறி குதித்து உள்ளே வந்தவள் அப்படியே படியில் ஏறி பின் கதவை தன்னிடமுள்ள திறப்பால் சத்தமின்றி திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.மின்விளக்கின் ஆளியில் கை வைத்தான் அது மூடியபடியே இருக்க பிழை வேறெங்கோதான் என உணர்ந்து கொண்டு மாடிப்படிகளினூடாக கீழ் மாடியை அடைந்தவள் ஏதோ "கிளிக்"சத்தம் கேட்க அருகிருந்த அலுமாரியுடன் பதுங்கிக் கொண்டாள். அவள் கைகளில் .47 தன்னியக்க கைத்துப்பாக்கி வந்துவிட்டிருந்தது. அவ்வேளையில் சில "டுமில்" சத்தங்களை தொடர்ந்து அச்சத்தம் வந்த திக்கிலிருந்து ஒரு உருவம் ஓடியது. அவ்வுருவத்தை துரத்த ஓடியவள் எதிலோ தடுக்குற்று கீழேவிழ கையிலிருந்த .47 உம் ரோச்லைற்றும் எங்கோ பறந்துவிட்டிருந்தன.

மீண்டும் எழும்பி திறந்திருந்த பிரதான ஆளியைமூடியவள் கண்களை பிரகாசம் கொள்ளை கொள்ள தனது .47ஐயும் எடுத்துக்கொண்டு திரும்பியவளுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது அங்கே அவனது உயிர் நண்பன் சுகந்தன் விலாஎன்புகளின் இருபக்கமும் முதுகுப்புறத்தே துப்பாக்கி குண்டுகள் ஓட்டை துளைத்திருக்க இரத்த வெள்ளத்தில் குப்புற பிணமாககிடந்தான் சிதறியிருந்த இரத்த கரையில் "S"மட்டும் தெளிவாகத் தெரிய ஏனைய எழுத்துக்கள் நகர்ந்த உடலால் அழிவுற்றிருந்தன.

வீட்டின் வெளியே வந்து ஆராய்ந்தவள் எதுவோ மின்ன அது ஒரு காற்சங்கிலி என தெரிந்துகொண்டு அதை எடுத்து சட்டைப்பையினுள் வைத்துக்கொண்டாள்.மீண்டும் வீட்டினுள் சென்று ஆராய்ந்தவள் ஏதும் கிடைக்காது போக தொலைபேசியில் பொலிஸ் நிலைய இலக்கத்தை அழுத்தியும் அழைப்பு கிடைக்கவில்லை. அங்கே தொலைபேசி வயர் அறுந்திருந்ததை கண்டவளிற்கு பிரதாப்பின் குரல்அரைவாசியில் பதற்றத்துடன் நின்று போயிருந்தமைக்கான காரணம் புரிந்தது. தனது செல்லிடப்பேசியில் அழைத்து விபரத்தை சொல்லிவிட்டு பிரதாப்பின் படுக்கை அறையினுள் புகுந்து ஆராய்ந்தாள் அங்கே திட்டுத்திட்டாக சில இரத்தக் கறைகள். உயர்ரக "சில்பா"சிகரட் ஒன்று பாதி முடிவடைந்த நிலையில் கிடந்தது.

இன்ஸ்பெக்ரர் வந்ததும் சில வார்த்தைகள் பேசிவிட்டு பிரதாப்பின் நாட்குறிப்பேட்டுடன் காரில் புறப்பட்டு தங்கையின் காதலன் இறந்த செய்தியை எவ்வாறு சொல்வது என்ற சிந்தனையுடன் வந்தவளுக்கு அந்தச் செய்தியை தங்யையிடம் கூறவேண்டிய தேவை இருக்கவில்லை. ஆம்! அங்கே தங்கை சுனித்தா தூக்கில் பிணமாய் தொங்கிக் கொண்டிருந்தாள். அங்கே காதலன் சுட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டிருந்தான். இங்கே காதலி தற்கொலை செய்துகொண்டிருந்தாள். துன்பங்களை அடக்கிக் கொண்டு துப்பறியும் மூளையை ஏவிவிட்டவள் தங்கையின் காலில் காற்சங்கிலி ஒன்று காணாமற் போயிருந்ததைக் கண்டாள். அவளது அறையை சோதனையிட்டவள் அங்கேயும் "சில்பா" ரக முடிந்த சிகரட் துண்டொன்று. இலாச்சியுனுள் அரைவாசி முடிந்த சிகரட்பெட்டி அப்பாடியானால் தங்கைதான் கொலைகாரியா?

சிறுவயதில் தாயை இழந்து தாயுமாய் தந்தையுமாய் வளர்த்த தந்தை எதிர்பாராது கொலை ஒன்றை செய்தபோது அவரை தூக்கு மேடைக்கு அனுப்பிய பாவப்பழி மறைய முன் தங்கையும் கொலைகாரி யாகிவிட்டாளா? தன் வாழ்க்கையை எண்ணி கலங்கியவள் இன்ஸ்பெக்ரறிற்கு தொலைபேசியில் தகவல் வழங்கி விட்டு அவரது வருகைக்காய் காத்ததிருந்தாள். வந்து சிறிதுநேர ஆராய்ச்சியின் பின் காலை வருவதாக கூறிவிட்டு அவர் சென்றுவிட பிரதாப்பின் நாட்குறிப்பேட்டை திறந்தாள். சில நாட்களின் முன் எழுதப்பட்டிருந்தது "Sன் உண்மைத்தன்மையை இன்றுடன் நான் புரிந்து கொண்டேன் இது வரையில் என்னுடன் பழகியதெல்லாம் போலித்தனமானது என்பதையும் புரிந்து கொண்டேன்". "S" என்பது தங்கையின் பெயராக கூட இருக்கலாம் என்ற எண்ணம் எழ தொடர்ந்து பக்கங்களை புரட்டினான். 3 நாட்களுக்கு முன் "S ஆல் எனக்கும் வதனாவுக்கும் செய்யப்பட்ட துரோகத்துக்கு S ஆல் கூட பிராயசித்தம் செய்யமுடியாது"என எழுதப்பட்டிருந்தது. அன்றைய தினம் எழுதப்பட்டிருந்தது "S இன்று கூறியவை S ன் எண்ணங்களை தெளிவாக புரியவைத்தன. "நான் அடைய நினைப்பதெல்லாம் சொத்தும் சுகமுமே அதற்காக கொலைக்கு மட்டுமல்லாது துரோகத்துதிற்கு கூட தயங்கமாட்டேன். அது வதனாவானாலும் கூட நான் நினைத்ததை அடையாமல் விடமாட்டேன். அடைந்த பின் வேறொன்று நினைக்காமலும் இருக்கமாட்டேன். சிந்தனையே வாழ்க்கை"இவ்வாறு கூறியும் வதனாவிடம் கூற ஏன் தயங்குகிறேன் எனவும் புரியவில்லை நாளை காலைக்குள் சகலமும் கூறிவிடவேண்டும்". அவள் சிந்தனை ஓட தங்யையின் அண்மைக்கால நடவடிக்கைகளில் சந்தேகம் ஏற்பட்ட போதும், வளர்ந்தவள் என்றும் கூறுவாள் என்றும் கேட்காதிருந்ததன் தவறு அப்போதுதான் புரிந்தது. நம்பவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் குழப்பத்துடன், எதுவோ உறுத்த தங்கையின் குறிப்பேட்டை திறந்தாள்.

சில நாட்களுக்கு முன் எழுதப்பட்டிருந்தது "ஏன் இவ்வாறு செய்ய நினைத்தேனோ தெரியவில்லை. அன்னையாய் வளர்த்த அக்காவிற்கு துரோகம் செய்கிறேன் என தெரிந்தும் அவளைக்கருதியே இதனை செய்கிறேன்." சில நாட்களின் பின் எழுதியிருந்தது. "அவனின் வார்த்தைகள் போலியாவை என்பதையும் துரோகமும் காமமுமே அவனில் மேலோங்கி நிற்கின்றது எனவும் புரிந்த போது நான் செய்த துரோகத்துக்கு அளவே இல்லை என்பதை புரிந்து கொண்டேன்". அன்றைக்கு முதல் நாள் எழுதியிருந்தது "அவனின் ஆசைக்கு இணங்க மறுத்தபோது கூறினான் என்னுடன் மோதாதே என் இஷ்டத்துக்கு குறுக்கானதை அகற்ற கொலைக்கு கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயங்கமாட்டேன் நான் நினைத்ததை அடையாமல் விடமாட்டேன். அடைந்த பின் வேறொன்று நினைக்காமலும் இருக்க மாட்டேன். சிந்தனையே வாழ்க்கை" அன்றைய தினம் "என் துரோகத்துக்கு பரிசாக பிரதாப்பிற்கு இறுதிபிரியாவிடை கொடுக்க முடிவெடுத்தேன்" என எழுதப்பட்டிருந்தது. தங்கை பிரதாப்பையும் பிரதாப் தங்கையையும் குற்றம் சாட்ட யாரை யார் கொலை செய்தார்கள் என்பதே அவள் மூளையை குடைந்த முக்கிய வினாவாக இருந்தது.எதுவும் புரியாது சுனித்தாவின் நாட்குறிப்பேட்டை வைக்கப்போக அவள் கையில் தட்டுப்பட்டு பிரதாப்பின் நாட்குறிப்பேடு கிழே விழுந்துவிட அதனை விழுந்தவாறு எடுக்க முதற்பக்கத்தில் பளிச்சிட்ட வார்த்தைகள் இவை "என் காதலி சுனித்தாவைபற்றி எதுவும் இந்த குறிப்பேட்டில் எழுவதில்லை என முடிவெடுத்தேன். ஏனெனில் அவளின் நினைவுகள் நெஞ்சில் எழுதப்பட வேண்டியவையாகும்".. அப்படியானால் பிரதாப் தன் குறிப்பேட்டில் குறிப்பிட்ட S யார்? எதுவோ பளிச்சிட தங்கையின் குற்ப்பேட்டை புரட்டியவள் இறுதி நாளில் நாட்குறிப்பில் வழமையான பேனாவை விட வித்தியாசமான பேனா உபயோகிக்கப்பட்டிருப்பது மட்டுமல்லாது கையெழுத்தும் சிறிது வேறுபட்டிருந்தது.சில நிமிட சிந்தனைகள் தொடர்ந்தன.ஒன்றும் ஒன்றும் இரண்டெனெ அறிய அவளுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை. தாள் ஒன்றை எடுத்து நடந்த சம்பவங்களையும் நடக்கப் போகின்ற சம்பவங்கள் என ஊகித்தவற்றையும் இன்ஸ்பெக்ரறிற்கு அவசரமாய் எழுதிவிட்டு தொலைபேசியில் அழைத்து உடனடியாக வீடு வரும்படி கூறி கடிதம் அவரைச் சேருமென்ற நம்பிக்கையில் மேசைமீது வைத்து விட்டு புறப்பட்டாள். மணி 3 ஐ அடிக்க காரை உயிர்ப்பித்து விரைவுபடுத்தினாள். வீட்டில் தங்கையின் பிணம் தொங்கி கொண்டி ருக்க மனதில் கொலைவெறியுடன் விரைந்து சென்றவள் ஒரு பங்களாவின் முன் நிறுத்திவிட்டு அழைப்பு மணியை அழுத்தும் போது மனதை ஓரளவு கட்டுப்படுத்திவிட்டிருந்தாள். கதவு திறபட உதடுகளில் புகைந்து கொண்டிருந்த சில்பா ரக சிகரட்டுடனும் ஒரு கையில் விஸ்கி குவளையுடனும் நின்று கொண்டிருந்த வதனாவின் காதலன் அவளைக் கண்டதும் கையிலிருந்த குவளை கிழே விழ வதனா கண்களை தாழ்த்தி எழுப்ப முன் சிகரட் எங்கே மறைந்திருந்தது. "நீ எங்கே? இங்கே..." எதுவோ உளறினான் சங்கர் ஏன் நான் வரக்கூடாதாக்கும். என்றவளின் குரலில் ஒலித்த விதத்தை சங்கர் புரிந்தபோதும் தொடர்ந்து கூறினான் "உன்வீட்டில் எதுவோ நடக்க நீ இங்கு வருகின்றாயே இன்னும் வீடு செல்லவில்லையா?" தடுமாறினான். எதனையும் பொருட்படுத்தாத மாதிரி கூறினாள்."இல்லையே வீட்டிலிருந்தே வருகின்றேன்.ஏன் அவ்வாறு கேட்கின்றாய் சங்கர்?" என்றபோது சங்கர் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை.அவள் தொடர்ந்தாள் "இன்று ஒரு முக்கிய விடயம் பற்றி கதைக்கவே வந்தேன்.நான் முன்பே கூறியபடி மேலதிக பயற்சிக்காக நாளை மாலை விமானத்தில் புறப்பட்டு வரும்படி இன்று மாலை தொலை நகல் அனுப்பியுள்ளனர்.ஆகவே உன்னுடன் இந்த இறுதிஇரவுப் பொழுதை கழித்துச் செல்லவே வந்தேன். சங்கர் நான் திரும்ப 6 வருடங்கள் ஆகலாம்.உன்னால் பொறுமையுடன் இருக்க முடியாது." என்றவாறு அவனின் மார்பில் முகம் புதைந்தவளின் உதடுகள் தொடர்ந்தும் முணுமுணுத்தன."சங்கர் என் துரோகத்திற்கு அளவில்லை என்றாலும் என்னை மன்னித்துவிடு" என்றாள்.அவளின் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினான்."இல்லை வதனா! என்னால் உன்னை உயிருள்ள வரை மறக்க முடியாது.அப்படியானால் என்னைக் கொன்றுவிடு" என்றான் அவளை இறுக அணைத்தபடி. அப்போது அவனையும் அறியாமல் அவன் உதடுகள் முணுமுணுத்தன. "உன்னை விட்டால் தானே நீ போவதற்கு. நான் நினைத்ததை அடையாமல் விடமாட்டேன்.அடைந்தபின் வேறொன்றை நினைக்காமலும் இருக்க மாட்டேன்.சிந்தனையே வாழ்க்கை அவனது அந்த கூற்றே அவனுக்கு எமனானது.

அவன் சுதாகரிக்குமுன் அவனைத் திடீரென தள்ளிவிட்ட வதனாவின் கைகளினுள் அவன்தலை நிமிரமுன் .47 தன்னியக்க துப்பாக்கி புகுந்திருந்தது. "அடேய் பாவி நீ செய்த துரோகத்திற்கு அளவே இல்லையடா.சொத்துக்காகவும் காமசுகத்திற்காகவும் எத்தனை பெண்களிற்கு துரோகம் செய்தாய் என்பதும் எனக்குத்தெரியுமடா.என் தந்தை கொலை காரணவதற்கும் அவரை தூக்கு மேடைக்கு அனுப்பவும் நீதான் காரணம் என்றும் எனக்குத்தெரியுமடா.ஆனால் உன்னிடம் ஏமாறாது உன்னைத் திருத்த எண்ணினேன்.என் 28 வருட வாழ்கையில் நான் கண்ட முதல் தோல்விக்காய் பழிவாங்க இங்கு வரவில்லை.ஆனால் ஏதுமறியாத அப்பாவியான என் தங்கையை ஏமாற்றியது மட்டுமன்றி பிரதாப்பின் கொலைப்பழியை அவள்மேல் சுமத்திவிடமுயன்றாயே. உயிருக்குயிராய் காதலித்த எனக்கு போதுமான தண்டனையை தந்துவிட்டாய்.எல்லா துரோகத்திற்கும் இன்று முடிவை கண்டுகொள்." என்றவள் கைகளிருந்த துப்பாக்கியிலிருந்து குண்டுகள்பாய "வதனா.." என அலறிய வண்ணம் வீழ்ந்தான்.

மறுநாள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் தலைப்பு செய்தி பிரசுரமாகியிருந்தது "பிரபல பெண்துப்பறிவாளர் வதனா மர்மமரணம் மேலும் மூவர் கொலை". அது அவ்வாறு பிரசுரமாயிருக்க இன்ஸ்பெக்ரர் மூளையை குடைந்து கொண்டிருந்தார்.ஏனைய மூன்று கொலைகளிற்கும் வதனா எழுதியிருந்த கடிதம் காரணம் கூறிவிட்டன வதனாவின் கொலைக்கு மட்டும் காரணம் புரியவில்லை.. ஆனால் அது பாசங்களின் சங்கமம் என்பது எங்கே புரியப்போகிறது. ஆம் தந்தையை தூக்கு மேடைக்கு அனுப்பிய போதே உலகமே வெறுத்து தற்கொலைக்கு தயாரானவள் குழந்தையான தங்கையையும் உயிரான காதலனையும் நினைத்து அம்முயற்சியை கைவிட்டவள் தங்கையை இழந்து காதலனை கொன்றபின் இனியும் வாழ்வென்பது தேவையா என சித்திக்க அந்த அதிர்ச்சியே எமனாக வந்துவிட்டது யாருக்குத் தான் புரியும்.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரநெட் என்றால் என்ன ?

தகவல் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பை நாம் இன்ரநெட் என்கிறோம். இன்ரநெட் போன்று எந்தசாதனங்களும் விரைவில் பிரபல்யமாகவில்லை எனலாம். இதில் எண்ணற்ற பிரயோகங்கள் அதாவது செய்திகள்,படங்கள்,பாடல்கள் காணப்படுகின்றமை தான் காரணம். ஒர் இடத்திலிருந்து வேறிடத்துக்கு தகவல்களை எவ்வடிவிலும் பரிமாறிக் கொள்ளமுடியும். பரந்த உலகத்தை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்துவிட்டது. இதன் பல்துறைப்பயனை நாம் அளவிடமுடியாது. இவற்றின் ஊடுருவல் கல்வி, அறிவியல், விவசாயம், மருத்துவம், பொறியியல் மற்றும் ஆராய்ச்சித்துறை என்று எண்ணில் அடங்காதவை ஏற்கனவே அமெரிக்காவின் ஒவ்வொரு வீட்டிலும் குடிகொண்டுள்ளது இன்ரநெட் உலகின் ஏனைய பகுதிகளிலும் பொதுவாக வீடுதோறும் விரைவில் இடம்பிடித்துவிடும். இந்த அமைப்பானது சோவியத் யூனியனுக்கு இடையில் ஏற்பட்ட இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பிறந்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது இவற்றின் தேவை அதிகமாகியது. 1957இல் சோவியத் ஏவிவிட்ட ஸ்புட்னிக் விண்கலம், இராணுவ மற்றும் தந்திரோபாய துறையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தகால கட்டத்தில்தான் அமெரிக்க இராணுவ துறையில் பாதிப்பு ஏற்பட்டது. அமெரிக்கஅரசு உடனடியாக இயங்க ஆரம்பித்தது பின் உயர்நிலை ஆய்வுக்காக செயல்த்திட்ட நிறுவனத்தை (APRA) (Advanced Projects Research Agency)நிறுவியது. இந்த நிறுவனம் இராணுவத்துறையில் நவீன தொழில் நுட்பங்களை கையாள ஆய்வு நடத்தியது. இரகசியம் பேணப்படுவதற்காகவும் தகவல்கள் அழித்தொழிக்கப்படுவதிலுள்ள வாய்ப்பை குறைக்கவும் கம்பியூட்டருடனான தொடர்புகளை வைத்துக்கொள்ளவும் தகவல்களை பாதுகாப்பாக பரிமாற்றவும் நீண்ட ஆய்வுகளுக்குப்பின்னர் அமைக்கப்பட்ட வலைப்பின்னல் அமைப்பு தான் இதன் ஆரம்பம்

கணணி என்பது சிக்கலான இலத்திரனியல் உபகரணம். தரவுகளை கொடுக்கும் போது அவற்றை உள்வாங்கி ஒழுங்குபடுத்தி தேவையான நேரத்தில் கருத்துள்ள தகவல்களை வழங்குகின்ற ஞாபகசக்தியுடன் இயங்கும் இயந்திரம். இது 1967 ல் அமெரிக்காவால் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழிந்த பின் இந்த வலையமைப்பானது இலக்ரோனிக் தபால்(E-Mail) நிலையமாக வளர்ந்தது. 1973 இல் தான் இன்ரநெட்(Internet)என்ற பெயரை அப்ரா விஞ்ஞானிகள் இந்த வலைப்பின்னலுக்கு சூட்டினார்கள். ஆரம்பத்தில் அமெரிக்கா உருவாக்கிய இன்ரநெட்றுடன் செய்மதிகள் மூலம் ஐரோப்பிய கணணிகள் இணைந்தன. 1976 இல் இருந்து இவற்றின் முன்னேற்றத்தை பல நிறுவனங்கள் மேற்கொண்டுவந்தன இறுதியில் 1992 இல் World Wide Web (w.w.w) உலகலாவிய தொடர்பு உருவாகியது. Colombo நகரத்தில்கூட Cybercafe,Nestcap என்றெல்லாம் இன்ரநெட் தோற்றம் பெற்றுவருகின்றது. இன்ரநெட் காய்ச்சல் யாரைத்தான் பிடிக்கவில்லை? உஙகளையுமா ?

தொகுப்பு:-தா.ஜெயதர்சன் 10E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்ரறக்ற் கழகமே நீ வாழி

தன்னலம் அற்றதாய் ஆற்றிடும் சேவையை
எம்நலம் ஆகவே கொண்ட எம் கழகமே
இன்னரும் பணிகளை இன்புற நீ செய்து
என்னருங் கழகமே வாழிநீ நீரூழி.

எங்களின் இன்னரும் இன்ரறக்ற் கழகமே
பொங்கிடும் மாந்தரின் துன்பங்களை போக்கிடும்
எங்ருமே போற்றிடச் சேவைகள் செய்திடும்
எங்களின் கழகமே வாழி நீ நீரூழி.

இந்துவின் மடியினில் குழந்ததாய் தவழ்ந்தனை
வெந்திடும் மக்களின் இன்னல்களை தீர்த்தனை
சந்தியில் போற்றிடும் சேவைகள் செய்யருவ
முந்து மெம் கழகமே வாழி நீ நீரூழி.

க.தர்சன்
தரம் 10E

**உலகம் உங்களை விரும்ப**

பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்க தவறாதீர்கள்
தகுதி இருந்தாலும், இல்லாவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்
உண்மையானாலும்,பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்.
பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்.
அரைகுறை நண்பரானாலும் அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாக பேசிக் கொள்ளுங்கள்.
குற்றம் என்றாலும் குறை என்றாலும் அதை பெரிது படுத்தாதீர்கள்.
ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் எதிர் வாதம் செய்யாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் மகிமை

சேவை என்பது எவ்வித பலனையும் எதிர்பாராது செய்தலாகும் சேவை செய்தால் ஓர் குழுவினிடையும்,ஓர் கிராமம் இடையினிலும் அச் சமுதாயமிடையேயும் அவர்களது கலாசார சூழலை சீர்குலைக்காது மேலோங்கிய பயனினை அடையச் செய்ய முடியும்.

சேவை செய்யும் போது பொது இலாபம் தரக்கூடியதாக இருக்கவேண்டுமே தவிர ஓர் தனி மனிதனையோ அல்லது ஓர் வர்க்கத்தினையோ பாதிப்படைய விடச்செய்தல் கூடாது.பொதுச்சேவைகள் நாடாளவியரீதியில் செயற்பட்டு வருவதை நாம் தற்போதும் காணக்கூடியதாக உள்ளது.இதனால் அன்றாடம் மக்களது தேவைகளையும்,வசதியீனங்கள் என்பவற்றையும் சில ஸ்தாபனங்கள் பூர்த்தியாக்கிவருகின்றன.பொது சேவைகள் எதுவாக இருப்பினும் அச் சேவைகள் மக்களுக்கு பூரண பயனை அளிக்கப்படவேண்டும் இதனால் மக்கள் முன்னேற்றம் அடைவர்.நாம் போது சேவைகளைச் செய்யும் போது அச்சேவைக்கு தேவையான உபகரணங்கள்,பணவசதி என்பன ரீதியான முறையிலே பெற்றுக்கொள்ளப்படவேண்டியன ஆகும்.பொதுச்சேவைகள் அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுகின்றதா? அவர்கள் அதைத் தகுந்த முறைகளிலே பயன்படுத்திவருகின்றார்களா? என்பதை நாம் பூரணமாக கண்காணிக்கப்படவேண்டும்.

பொது சேவைகள் திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டுச் செயல்ப்படுத்தப்பட வேண்டும்.பொது சேவைகளால் ஏற்படும் வெற்றிகள் யாவும் அச்சேவையானது மேலும் வளர்வதற்கு வழி வகுக்கிறது.அத்துடன் நின்றுவிடாது மேலும் பலருக்கு இச்சேவையினிலே ஆர்வத்தை ஊட்டுகின்றதாக உள்ளது. ஓர் கிராமத்தில் அல்லது ஓர் நாட்டிலே வேறுபட்ட சேவை குழுக்கள் இருப்பினும் அவை எல்லாம் தமக்குள் ஓர் ஒற்றுமையினை கொண்டிருக்கவேண்டும்.இவ்வாறு ஒற்றுமையாக இருத்தலாலே ஓர் சேவையினை ஒழுங்காகச் செய்யமுடியும் இவ்வாறு இல்லாவிடின் நாம் செய்யும் சேவை எமக்கே வெற்றி அளிக்காது காணப்படும் புயல் ,வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும்,யுத்தம் குண்டுவீச்சுக்கள் போன்ற செயற்கை அனர்த்தங்களினாலும் ஏற்படும் பாதிப்பிற்கு எல்லாம் பொதுச்சேவை செய்ய கூடிய நியுவளங்கள் அந்தந்த இடங்களில் இருப்பதாலேயே உடனடியாக சேவையை செய்ய முடிகிறது எனினும் இவ்வாறாக உடனடியாக சேவைசெய்யும் நிறுவனங்களே அரச ஸ்தாபனத்திலும் முன்னிலையினை வகுக்கின்றது சேவைகள் மூலம் மனிதநேயங்கள்,அவர்களது உளப்பாதிப்புக்கள் என்பன் சீர்கெடாது பாதுகாக்கப்பட்டு வருகிறது

எனவே சேவை என்பது,
"என் கடன்பணி செய்து கிடப்பதே"
எனும் வாக்கியத்துக்கு அமைய இணங்கி நிற்பதையும்
நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

முற்றும்

**BY:-S.Gobinath**
**Grade:-11 B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக்கடல்

## அன்னை தெரேசா

அணையாவிளக்கு அன்னை திரேசா ஓர் கருணைக்கடல். இவர் 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி அல்பேனியாவில் பிறந்தார். சிறுவயதில் இருந்தே இறைபக்தி கொண்டவர். தனது 7வது வயதிலே தந்தையை இழந்த இவர் தனது 12வது வயதிலேயே கன்னியாஸ்திரிகள் சபையில் இணைந்து துறவு பூண்டார் ஆனால் தேவஅழைத்தல் 18ம் வயதிலேயே அவருக்கு கிடைத்தது. 1929ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி அருமைத்தாயிடமும் உற்றார் உறவினரிடமும் விடை பெற்றுக்கொண்டார். அன்றைய தினமே கருணைக்கடலுக்கு டார்ஜிங்கிலுள்ள வோரோடே கன்னியாஸ்திரி மடத்திலிருந்து அழைப்பு கிடைக்க அங்கு சென்று சேர்ந்தார். 1931ம் ஆண்டு மார்ச் 24ம் திகதி கன்னியாஸ்திரியாக திருநிலைப்படுத்தப்பட்டார். அன்றிரவே அவரது இறைபணி ஆரம்பமானது. லோரைடா மடத்தின் அனுமதி பெற்று அவரது சமூகப்பணிகள் வெளிஉலகிலும் முளைவிட ஆரம்பித்தன. பாட்டானாவிலும் வைத்தியபயிற்சி பெற்றுக்கொண்டார். கல்கத்தாவிற்கு பயணமான அன்னை கல்கத்தாவிலுள்ள புனிதமரியால் பாடசாலையில் 17 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றினார்.1944இல் அதன் அதிபரானார்.

அன்னை தெரேசாவின் தலைமையில் சகோதரிகள் சபை ஒன்றினைந்து தேவஸ்தாபனங்களை உருவாக்கினர். அன்னையின் கைமாறு அற்ற தூய்மையான பணியை எடுத்துக்காட்ட வெள்ளைநிறசேலையில் நீலகரையிட்டு அணிந்துவந்தனர். தனது சொந்த சமூகசேவை இயக்கமாக இதனை அன்னை ஆரம்பித்தார். கருணைக்கடலின் இந்த இயக்கம் 130 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 500 இற்கும் மேற்பட்ட நிலையங்களில் பணியாற்றுகிறது. கருணைக்கடலின் சகோதரிகள் சபையில் 5000 இற்கு மேற்பட்ட சகோதரிகள் இணைந்துள்ளனர்.

1979இல் சர்வதேசதரத்தில் நோபல் பரிசும் கிடைத்தது. அன்னை தெரேசா இலங்கை வந்ததுமுண்டு நம்நாட்டிலும் அன்னையின் பெயரால் ஆறு இல்லங்கள் பணியாற்றி வருகின்றன. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட சுகவீனங்கள் காரணமாகத் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். அப் பதவிக்கு கருணைக்கடலின் அருள் நிறைந்த ஆசியுடன் நிர்மலா பதவியேற்றார். ஆலமரமாக வேரூன்றி நின்ற அன்னை தெரேசா பலமக்களின் கண்ணீரின் மத்தியில் 1997ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ம் திகதி இறைபதம் எய்தினார்.
அன்னை தெரேசா மறைந்தாலும் அவர்விட்டுச்சென்றபணி தொடரும்.

ஆக்கம்:தா.ஜெயதர்சன் 10E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Participants Of the Inter School Quiz Competition Conducted by our club.

1. *Jaffna Central College.*
2. *Jaffna Vaideswara College*
3. *St.Patrics College.*
4. *Chundukuli Girls College.*
5. *Jaffna Hindu Ladies College.*
6. *Vembadi Girls High School.*

## Participants of the final Competition

1.Chundikuli Girls College
2.St. Patricks College

**The Winning School**

1)----------------------------------------------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Executive Comittee 2001/2002

I) Patron:-Mr.A.Sri Kumaran(The Principal)

II) Teacher-in-charge:-Mr.S.Thayaparan

III) Rotary adviser:-Rtn.N.Vithiyatharan.

IV) President:-Int.V.Kokulan

V) Secretary:-Int.A.Andrew Nishanthan

VI) Treasurer:-Int.L.Ketharasarma

VII) Vice President:-Int.R.Rajeevan

VIII) Asst.Secretary:-Int.V.Tevakanthan

IX) Club Service:-Int.E.R.Kishok

X) Community Service:-Int.S.Balarajeevan

XI) Finance:-Int.S.Gobinath

XII) International Understanding:-Int.K.Tharsanna

XIII) Sergeant-at-Arms:-Int.P.Sivapalan

XIV) Editors:-Int.S.Printhaban,Int.M.Anparasan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Members of our Club

| | |
|---|---|
| 1)T.Thabendra | 2001A/L |
| 2))T.kopinath | 2001A/L |
| 3)T.Ragulan | 2001A/L |
| 4)M.Janenthiran | 2001A/L |
| 5)S.Karthigan | 2001A/L |
| 6)T.Anujan | 2001A/L |
| 7)V.Kokulan | 2003A/L |
| 8)S.Thillakan | 2001A/L |
| 9)A.A.Nishanthan | 2003A/L |
| 10)P.Mayooran | 2001A/L |
| 11)R.Ragulan | Grade 9B |
| 12)V.Srivisagan | Grade 9B |
| 13)P.Sivapalan | Grade10E |
| 14)S.Thishanthan | Grade10E |
| 15)V.Nitharsan | Grade10D |
| 16)S.Thaneshan | Grade10E |
| 17)T.Jeyadarshan | Grade10E |
| 18)N.Arun | Grade10E |
| 19)K.Tharhanan | Grade10E |
| 20)M.Anparasan | Grade10E |
| 21)N.Nirajan | Grade10E |
| 22)M.Kaneeshananth | Grade10E |
| 23)J.Lajeeban | Grade10E |
| 24)B.Sabesan | Grade10B |
| 25)R.Praveen | Grade10E |
| 26)S,Gobinath | Grade11B |
| 27)N.Dinesh` | Grade11B |
| 28)S.Brinthaban | Grade11E |
| 29)A.Paraneetharan | 2003A/L |
| 30)S.Ravisangar | 2003A/L |
| 31)V.Saravanan | 2003A/L |
| 32)G.Sutharsan | 2003A/L |
| 33)L.Ketharasarma | 2003A/L |
| 34)E.R.Kishok | 2003A/L |
| 35)B.Balarajeevan | 2003A/L |
| 36)S.Senthur | 2003A/L |
| 37)S.Priyanthan | 2002A/L |
| 38)N.Akilan | 2002A/L |
| 39)V.Tevakanthan | 2002A/L |
| 40)S.Rajeevan | 2002A/L |
| 41)S,Sarooban | 2002A/L |
| 42)M .Krishna | 2002A/L |
| 43)V.Kajamugan | 2001A/L |
| 44)S.Gunavarshan | 2001A/L |
| 45)P.Rajakumaran | 2001A/L |
| 46)R.Tharsan | 2001A/L |
| 47)K.Sananthan | 2001A/L |
| 48)S.Prasath | 2001A/L |
| 49)S.Sivakumaran | 2001A/L |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல....

பாடசாலையில் எம் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும்அளிக்கும் அதிபர், பிரதி அதிபர்,ஆசிரியர்மற்றும் ஆளணியினருக்கும் நம்மைசரியான பாதையில் வழிப்படுத்தும் பொறுப்பாசிரியருக்கும், யாழ் றோட்டறிக்கழகத்தினருக்கும் எமது செயற்பாடுகளுக்கு என்றென்றும் ஊக்கமளித்து வரும் எமது றோட்டறி ஆலோசகரும் பழைய மாணவர் சங்க செயலருமாகிய Rtn.ந.வித்தியாதரன் அவர்களுக்கும்நூலகத்திற்கு உதவும் செயற்திட்டத்திற்கு உதவிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் திரு.S.T.B.இராஜேஸ்வரன் அவர்களுக்கும் யாழ் போதனா வைத்தியசாலையினருக்கும் டாக்டர் .இ.சிவசங்கர் அவர்களிற்கும் இடம் பெயர்ந்த மக்களிற்கு உதவும் செயற்திட்டத்தில் எமக்கு கைகொடுத்த பொதுமக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள்,யாழ் நகர மைய றோட்டறக்ற் கழக மற்றும் இன்ரறக்ற் அல்லாத மாணவர்களிற்கும் நூலகத்திற்கான நூல் கொள்வனவில் கை கொடுத்து உதவிய கொக்குவில் திரு.குகனேந்திரன்(குகன்) அவர்களிற்கும் நாம் நடாத்திய பொது அறிவு வினாடிவினா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாடசாலைகளிற்கும் எல்லா வற்றிற்கும் மேலாக தூறலை சிறப்பாக அச்சிட்ட ஹரிக்ஹணேஸ் அச்சகத்திற்கும் மற்றும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எங்களிற்கு உதவும் அனைவரிற்கும் யாரையாவது நாம் குறிப்பிடத் தவறியிருந்தால் அவர்களிற்கும் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ற் கழகத்தினரின் இதய பூர்வமான நன்றிகள்.

நன்றி

16.02.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா ?

★மோட்டார் வாகனங்களா ?

★பற்றறி வகைகளா ?

★M.D 90 நீக் கொண்டிசன் மோட்டார் சைக்கிள்களா

★அவற்றிற்கான உதிரிப்பாகங்களா ?

★அஸிட் வகைகளா ? ★சோலர் வகைகளா ?

எது வேண்டுமோ, நிதான விலையில், நியாயமுறையில்
ஒரிடமாக பெற்றிட

# ARUL VINAYAGAR TRADERS

இல: 106 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

அருள் விநாயகர் மோட்டோர்ஸ் .
இல : 108 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

கிளை:- மெயின் வீதி,
சங்கானை.

உங்கள் தேவைக்கு ஏற்ற பொருட்களை மலிவாகவும்
தரமாகவும் பெற்றிட இன்றே நாடுங்கள்

# RUPA VERSATILE TRADES

***Distributors For:***

***Smith Kline Beechom Mackwoods Limited.***
***Gamma Pharmaceuticals <pvt> Ltd .***
***Demage Forsyth &Co .Ltd.***
***HEMAS MARKETTING.***
***US WATTE CONFECTIMERY.***
***CEYLON BISCUITS LTD.***
***RECKITT & COCMAN.***
***BURN PHIPLANOA (PVT)LTD.***

*NO:104 A, STANLY ROAD,* *JAFFNA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசோகா நகை அகம்

தங்க நகை உலகில் தாரக நட்சத்திரம் தரமான 22 கரட்
தங்க நகைகள் உங்கள் இரசனைக்கேற்ப எங்கள் விற்பனைகள்
வெளிநாட்டு டிசைன்களில் எங்கள் கை வண்ணங்கள்
உத்தரவாதப்படி பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

111 A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

---

வீடியோ　　வண்ணக்கலர்

கறுப்பு வெள்ளை
படப்பிடிப்பில் பல வருட கால அனுபவம்

# SATHEES VIDEO & PHOTO

நுணாவில் கிழக்கு
சாவகச்சேரி

---

அனைத்துவித மோட்டார் உதிர்ப்பாகங்கள்
சைக்கிள் பாகங்கள் இன்றே நாடுங்கள்

591, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org